**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண்.15/2024 நாள் : 06.10.2025

வா.சா:–1 சிவானந்தம் ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி(4 மற்றும் 8பிரதிவாதிகள் தரப்பில்):–

நான் வேறு வரவு, செலவு மற்றும் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் வேறு வரவு செலவு என்றால் 1987ம் வருடத்திற்கு பிறகு. 1987ம் வருடம் வரைக்கும் நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் வரவு, செலவு செய்தோம் என்ற ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் 1987ற்கு 2 வருடத்திற்கு முன்னரே 4ம் பிரதிவாதி வேறு தனியாக குடித்தனம் சென்று விட்டார். அவர் தனிக்குடித்தனம் சென்றதில் இருந்து தனியாக வரவு, செலவு என்றால் சரிதான். 26.03.1993ல் தான் எனக்கு இரயில்வே துறையில் பணி நிரந்தரம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பு தினக்கூலி கட்டுமான பணி செய்தேன். அந்த தினக்கூலி கட்டுமான பணி செய்ததற்கான எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் **05.02.2003ம் தேதியிட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் நான் குழந்தை வடிவேல் மற்றும் சிலரிடம் இருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆகும், அந்த கிரைய பத்திரம் பி.வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 06.10.2004ம் தேதி நான் குழந்தை வடிவேல் மற்றும் சிலரிடம் இருந்து ஒரு சொத்து கிரையம் பெற்றுள்ளேன். **அந்த கிரையம் பெற்ற சொத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த கிரைய பத்திரம் பி.வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கூட்டு குடும்பமாக ஒரு குறிப்பிட்ட காலம் வரை இருந்தோம்

என்றும், அதற்கு பின்னிட்டு தனித்தனியாக குடியிருந்தோம் என்று எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ. 3 பஞ்சாயத்து பாக சாசனத்தில் எனது தகப்பனார் நான் 4ம் பிரதிவாதியான எனது சகோதரர் கையொப்பம் செய்துள்ளோம், எனது தாயார் கைரேகை வைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எழுதியவர் சி. சரஸ்வதி க/பெ. சின்னுச்சாமி, ஆர்கே புதூரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தவர்கள் அனைவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றும், எங்கள் அருகில் உள்ள ஊரை சேர்ந்தவர்கள் ஆகும் என்றால் சரிதான். 1990ம் ஆண்டு 50 சென்ட் வயல் என் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அது தவிர எனது மாமியாரிடம் இருந்து 2006ம் வருடம் 6 சென்ட் தோட்டமாக இருந்து எனது பெயரில் வீட்டிடமாக கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். என் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் எதையும் இந்த தாவாவில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வரவில்லை என்றால் சரிதான். கேவியேட் நோட்டீஸ் மட்டும் வரப்பெற்றது. 8ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரத்தை தாவா தாக்கல் செய்வதற்கு முன்னரே எனது வழக்கறிஞரிடம் கூறிவிட்டேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது 8ம் பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த தாவாவில் கோரியுள்ள பாகபிரிவினை தவறானது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே சொத்துக்களை தனித்தனியாக பாகபிரிவினை செய்து அனுபவித்து வருவதால் அதனை பொறுத்து நான் பாகபிரிவினை கோரியுள்ள வழக்கு

**Copy of Deposition**

நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாவில் வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடிசெய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
|---|
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.10.06 18:22:06 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |